DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC. 8/2021

Prosecution witness – PW3

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.கருப்பசாமி | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused absent. Petition U/s 317 Cr.P.C filed and allowed.)

15.05.2025– 03.00 P.M

முதல் விசாரணை:–

1. நான் ஓரிவயல் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்து போன சந்தானம் எனது அக்காவின் கணவர்.

2. கடந்த 11.03.2020ம் தேதி மதியம் சுமார் 03.00 மணியளவில் நான் கடலாடி தாலுகா அலுவலகத்திற்கு சென்றுவிட்டு வெளியே வந்த போது ஆடு பிடித்துக்கொண்டு வந்த சந்தானம் மீது இருசக்கர வாகனம் மோதிவிட்டது. இருசக்கர வாகனம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்தது. இறந்து போன சந்தானம் என்பவரும், வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஆட்டை பிடித்துக்கொண்டு ரோட்டில் வந்து கொண்டிருந்தார்.

3. சம்பவத்தை பார்த்த நானும், கணேசமூர்த்தி என்பவரும் ஓடிச்சென்று தூக்கினோம். சந்தானத்திற்கு உடம்பில் பல இடங்களில் காயம்பட்டு இருந்தது. சிகிச்சைக்காக கடலாடி அரசு மருத்துமனைக்கு கொண்டு சென்றோம். மருத்துவர்கள் சந்தானத்தை பார்த்து விட்டு தலையில் பலத்த காயம் பட்டிருப்பதாக சொல்லி இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போக சொன்னார்கள். இரவு நேரம் என்பதால் காலையில் கொண்டு செல்லலாம் என்று சந்தானத்தை அவரது வீட்டிற்கு கொண்டு சென்றோம்.

4. ஆனால் மறுநாள் காலை அவர் இறந்துவிட்டார். சம்பவ இடத்தில்

இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து சந்தானத்தின் மீது மோதிய நபர் ஏனாதி கிராமத்தைச் சேரந்த ராமு மகன் மலைச்சாமி என்று அங்கு இருந்தவர்கள் சொல்ல கேட்டு தெரிந்து கொண்டேன். மலைச்சாமியும் சம்பவ இடத்தில் இருந்தார். அவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனமும் சம்பவ இடத்தில் கிடந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>

இவ்வழக்கின் புகார்தாரர் இறந்து போன நபரின் மகள் என்றால் சரிதான். அவருயை கணவர் பெயர் ரவி. வழக்கின் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் போலீசார் விசாரணையில் இருசக்கர வாகனம் இறந்து போன நபரின் மீது மோதியது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து 12.03.2020 ந் தேதி விசாரணை செய்தார்கள்.

நான் போலீசார் விசாரணையில் சம்பவ தினத்தன்று வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்து கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். என்னுடைய தனிப்பட்ட காரணத்திற்காக வந்தேன். போலீசார் விசாரணையில் இறந்து போன நபர் எனது அக்காவின் கணவர் என்று கூறியுள்ளேனா என்றால் ஆமாம். சாட்சிப்பட்டியலில் உள்ள கணேசமூர்த்தியை எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்தில் நான் எங்கள் ஊர் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தேன்.

நான் ஊராட்சி மன்ற தலைவராக இருந்ததாலும், வழக்கில் இறந்து போன நபர் என் அக்காவின் கணவர் என்பதாலும் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி